1982 மார்ச் 22] [டாக்டர் கே. சௌரிராஜன்]

காவல் துறையிலே குற்றங்கள் அதிகமானதற்குக் காரணம் சமுதாயத்தில் தனி நபர் ஒழுக்கமும், நாணயமும், நேர்மையும் குறைந்து விட்டது, அதனால் காவல் துறையிலும் கூட ஒழுக்கம் குறைந்துவிட்டது. இங்கே உறுப்பினர்கள் இதற்கு பல உதாரணங் களை எடுத்துச் சொன்னார்கள். காவல் துறையிலே ஒரு பர்ட்டி குலர் போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் உத்யோகம் வேண்டு மென்றால் அதற்கே லஞ்சம் கொடுக்க வேண்டிய நிலை இருக் கிறது. மாம்பலம் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் வேலையா? அதற்கு இவ்வளவு ரூபாய். மைலாப்பூர் வேண்டுமா? அதற்கு இவ்வளவு ரூபாய் கொடுத்தால் மாற்றல் கிடைக்கிறது. இதனால் அந்தத் துறையில் ஊழல் அதிகரித்து இருக்கிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொது சொத்துக் களுக்கு சேதம் விளைவிக்கிறபோது மொத்தமாக ஒரு கலெக்ட் டிவ் பைன் போட வேண்டுமென்று ஒரு அனவுன்ஸ்மென்ட் கொடுத்தார்கள். ஆகவே பொதுச் சொத்துக்களை பாதுகாக்க வேண்டிய கடமை இந்தக் காவல் துறைக்கு இருக்கிறது. பஸ்ஸை கொளுத்துகிறார்கள் என்றால், அது சாதாரண காரியம் இல்லை. பெட்ரோல் வேண்டும், ஆட்கள் வேண்டும். இவைகளைப் பார்க் கிறபோது The intelligence wing has thoroughly failed to maintain the law and order and also should have anticipated certain possible catastrophies என்று சொல்லி பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 23-3-1982 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-39 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

145. தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டம் செயலுக்கு வரும் நாள் குறித்து 18-1-1982 ஆம் தேதியிடப் பெற்ற சட்டத் துறையின் 9 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 39/1956) 6 ஆவது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

146. இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் நிறுவனம் தயாரிக் கும் பாலியெஸ்டர் ஸ்டேபில் பைபர் விற்பனை மீதான விற்பனை வரி வீதத்தைக் குறைப்பது குறித்து 15-2-1982 ஆம் தேதி யிடப்பெற்ற வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின்

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[1982 மார்ச் 22

175 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

147. 25–2–1978 ஆம் தேதியிடப்பெற்ற வணிக வரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் அறிவிக்கை எண் 11 (1) வ.வ.ச.அ. 54/78 இல் சில திருத்தங்கள் செய்வது குறித்து 8–1–1982 ஆம் தேதியிடப்பெற்ற வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 43 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

142. தமிழ்நாடு காவல் துறை குறித்த ஆய்வுரை, 1981–82 (தமிழ்-ஆங்கிலம்).

143. தமிழ்நாடு தீயணைப்புத் துறை குறித்த ஆய்வுரை, 1981–82 (தமிழ்-ஆங்கிலம்).

நிதி அமைச்சரின் உரை ஆங்கிலத்தில்

(278-ம் பக்கத்திலுள்ள அடி குறிப்பை காண்க)

Sir,

I rise to place before this august House, the Final Supplementary Estimates for the year 1981—82. Of the total amount of Rs. 502.67 crores included in these estimates, 235.73 crores is on the Revenue Account and Rs. 266.94 crores on the Capital and Loan Accounts. The details of the amounts included in the various Demands and the reasons for the additional provisions have been indicated in the statement annexed. These estimates cover the expenditure on items which have been sanctioned after the presentation of the First Supplementary Estimates and those for which additional provision is required, over and above the existing appropriation. Of the various items included in the Estimates, I shall highlight a few important schemes.

2. The Honourable Members are aware, that the welfare of the Scheduled Castes and the efforts in helping them to cross the poverty line is of great concern to this Government and